# IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE OF SALEM

O.S. No.78/2013

சாட்சி : PW–1

பெயர் : புஷ்பா தேதி: 06–12–2024

**2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

பிரதிவாதிகள் போலி ஆவணங்கள் தயார்செய்தது தொடர்பாக நான் காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை. என்னைவிட எனது அண்ணன் மாரிமுத்து சுமார் 10, 15 வயது மூத்தவர். குறிப்பாக என்னை விட எவ்வளவு வயது மூத்தவர் என்று என்னால் சொல்லமுடியாது. என் மூத்த அக்கா 1ம் வாதிக்கு திருமணம் ஆகும் போது அவரது வயது சுமார் 21, 22 இருக்கும். வாதி இந்திராணியும், வாதி அமுதவள்ளியும் அண்ணன், தம்பியை திருமணம் செய்திருந்தார்கள். அவர்கள் குருசாமிபாளையத்தில் வசிக்கிறார்கள்.

4ம் வாதி வளர்மதியை வனவாசியில் உள்ள நபருக்கு திருமணம் செய்து கொடுத்துள்ளோம். செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக்கொடுத்தது வாதிகளாகிய எங்கள் 4 பேருக்கும் தெரியும் என்றும் வழக்கிற்காக தெரியாது என்று பொய் சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. செட்டில்மெண்ட் ஆவணத்தை நான் பார்த்ததில்லை. எனது அப்பா எப்படி கையெழுத்து போடுவார் என்று எனக்கு தெரியும்.

செட்டில்மெண்ட் பத்திரத்தில் யார் சாட்சி கையெழுத்து போட்டார்கள் என்று எனக்கு தெரியும். ஆனால் அவர் பெயர் ஞாபகம் இல்லை. அந்த செட்டில்மெண்ட் பத்திரத்தில் 4 பேர் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்களா என்றால் போட்டிருக்கலாம். ஆனால் ஒருவர் பெயர் வெங்கடாச்சலம்.

இன்றைய தேதியில் தாவா சொத்துக்கு யார் பெயரில் மின்இணைப்பு ரசீது உள்ளது என்று எனக்கு தெரியும் என்றால் சரிதான். எனது அக்காவின் திருமண செலவிற்கு எவ்வாறு பணம் வந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனது அப்பா ஒரு சொத்தை குமரவிலாஸ் என்ற நகைகடைகாரருக்கு விற்பனை செய்துள்ளார். விற்பனை செய்த தேதி எனக்கு தெரியாது. எனது அப்பா இறப்பதற்கு எத்தனை நாட்களுக்கு முன்பு சொத்தை விற்பனை செய்தார் என்று எனக்கு தெரியாது. எவ்வளவு விஸ்தீரண சொத்து எனது அப்பா விற்பனை செய்துள்ளார் என்று எனக்கு தெரியாது.

செட்டில்மெண்ட் பத்திரத்தின் அசலை நான் பார்த்ததில்லை. வில்லங்கம் பார்த்து தான் செட்டில்மெண்ட் பத்திரம் பற்றி எனக்கு தெரியவந்தது. என்னுடைய வழக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள தேதிகள் தொடர்பான ஆவணம் எதுவும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவாவில் குறிப்பிட்டுள்ள சொத்து விவரம் தவறானது என்றால் சரியல்ல. சொத்தை விற்பனை செய்த பின்பு அந்த சொத்து குறித்து வில்லங்கள் செய்யப்பட்டுள்ளதா என்று எனக்கு தெரியாது.

எனது அப்பா சாகும்போது அவருக்கு கடன் எதுவும் இல்லை. எனது அப்பா உயிருடன் இருக்கும்போதே எனது அப்பா கடன் வாங்கியதில்லை. எனது அப்பாவிற்கு கடன் இருந்தது என்றும், எனது அப்பா அந்த கடனை அடைத்தார் என்றும் சொன்னால் அது தவறானது. 1 முதல் 3 வாதிகளான எங்களின் திருமணத்தின் செலவிற்காகத்தான் எனது அப்பா சொத்துக்களில் ஒருபகுதியை விற்பனை செய்தார் என்றால் சரியல்ல. எனது அப்பா 1 முதல் 3 வாதிகளான எங்களுக்கு திருமணத்தின் போது சீர்வரிசை நல்லமுறையில் செய்யவேண்டும் என்பதற்காக சொத்தின் ஒரு பகுதியை விற்பனை செய்தார் என்றால் சரியல்ல.

நல்லது கெட்டதற்கு மட்டும் எனது அப்பாவீட்டிற்கு வருவோம் என்றால் மாதம் இருமுறை அப்பாவீட்டிற்கு வருவோம். எனது அப்பா 1 முதல் 3 வாதிகளான எங்கள் திருமணத்திற்கு கடன் வாங்கியிருந்தார் என்றும், அந்த கடனை திரும்ப செலுத்த தான் சொத்தின் ஒருபகுதியை விற்பனை செய்தார் என்றால் சரியல்ல. எனது அப்பா கடன் வாங்கவில்லை. நான் சொல்வது தவறு என்றும், எனது அப்பா கடன் வாங்கியிருந்ததை மறைத்து பொய் சாட்சியம் சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

4ம் வாதியின் திருமணத்திற்கு எனது அண்ணன் தான் அழைப்பிதழ் அச்சடித்தார். 4ம் வாதியின் திருமணத்திற்கு எனது அண்ணன் கடன் வாங்கவில்லை. எனது அப்பா கடனை அடைப்பதற்காக என்று சொல்லி ஆவணம் எழுதிக்கொடுத்திருந்தால் அது தவறானது தான். 2002க்கு பிறகு சொத்து எனது அண்ணனின் சுய சம்பாதிய சொத்தாக மாறிவிட்டதால் தாவா சொத்திற்கு எங்களுக்கு பாகம் கிடைக்காது என்றால் சரியல்ல. சொத்து கிடைத்த தேதியிலிருந்தே அந்த சொத்து எனது அப்பாவின் சுய சொத்தாக மாறிவிட்டதால் அந்த சொத்துக்களில் எங்களுக்கு பாகம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

எனது அப்பா தாவா சொத்துக்களை பொறுத்து ஏற்பாடு செய்துவிட்டு இறந்துவிட்டதால் தாவா சொத்துக்களில் எங்களுக்கு பாகம் கிடைக்காது என்றால் சரியல்ல. தாவா சொத்து சுய சம்பாதிய சொத்தாக மாறிவிட்டதால் அந்த சொத்துக்களில் எங்களுக்கு கூட்டு சுவாதீனமோ, பாகமோ இல்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் நாங்கள் சுவாதீனத்தில் இல்லை என்றும் அதனால் நாங்கள் செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் தவறானது என்றால் சரியல்ல.

எனது அப்பா கடனை அடைப்பதற்கு சொத்து கிரயம் எழுதிக்கொடுப்பதாக ஆவணங்களில் குறிப்பிட்டிருந்தால் அது பொய். 4ம் வாதி திருமணத்திற்கு எனது அண்ணன் சொத்தை விற்றார் என்று சொன்னால் அது தவறு. சொத்து விவரத்தில் சொல்லியுள்ள கதவு எண், மின் இணைப்பு எண் தவறானது என்று சொன்னால் அது எனக்கு தெரியவில்லை. தற்போது மாறியிருக்கலாம்.

வழக்குரையில் எனது அப்பா இறந்த தேதியை தவறாக சொல்லியுள்ளேன் என்றால் மறதியில் அவ்வாறு சொல்லியிருக்கலாம். தாவா சொத்து பொறுத்து ஏற்பட்டுள்ள வில்லங்கள் 2002 ஆம் வருடமே எனக்கு தெரியும் என்றும், அவ்வாறு தெரிந்தும் நான் காலதாமதமாக வழக்கு தாக்கல் செய்துள்ளதால் என் வழக்கு காலவரையால் பாதிக்கப்பட்டது என்றால் சரியல்ல. காலதாமதமாகத்தான் வில்லங்க சான்று வாங்கி பார்த்தோம்.

சொத்தை கிரயம் பெற்றவர்கள் மீது காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. எனது அப்பா படுத்தபடுக்கையாக இருந்து சிகிச்சை பெற்றார் என்பதை காட்ட நான் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்து எனது அப்பாவிற்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்பதை காட்ட நான் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் அது எனக்கு சரியாக தெரியவில்லை.

எனது அப்பாவை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அழைத்து சென்று பேசி அவரிடம் கையெழுத்து வாங்கியுள்ளார்கள். எனது அப்பா வீட்டில் படுத்தபடுக்கையாக இருந்ததிற்கு முன்பே அவரிடம் கையெழுத்து வாங்கியுள்ளார்கள். தாவா சொத்தை 27.02.2002 இல் தானபத்திரம் எழுதி சுவாதீனம் கொடுத்துவிட்டதால் தாவா சொத்தில் எங்களுக்கு எந்த பாகமும் கிடைக்காது என்று சொன்னால் சரியல்ல. பொய் சொல்லி தான் எனது அப்பாவிடம் கையெழுத்து வாங்கியிருப்பார்கள்.

பொய்யான சங்கதிகளை சொல்லி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. செட்டில்மெண்ட் ஆவணத்தை எந்ததேதியில் நகல் எடுத்து பார்த்தேன் என்றால் தேதி தெரியவில்லை. எனது அப்பா இறந்ததிற்கு பின்பு தான் நகல் எடுத்து பார்த்தேன். நாங்கள் நகல் எடுத்து பார்த்ததாக சொல்லும் ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாததால் வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் எங்களுக்கு பாத்தியம் இல்லாததால் நாங்கள் பாகம் கேட்கமுடியாது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/– L. Kalaivani,
III Additional District Judge,
Salem.